சனிற்றறி வெயார்
(SANITARY WARE)
இறக்குமதி செய்த கொமேட் — Commode சிஸ்ரேன் மூடியுடன் ரூபா 975/- ல் இருந்து
வாஷ்பேஸின்கள்
இணைப்புக்களுடன் ரூபா 450/-ல்
பாத் (Bath) 4000/- ல் இருந்து மாபிள்கள், S. LON பைப்புகளும் பீலிகளும் மற்றும் இணைப்புகளும் பேபி வாக்கரும், Twistingcar கிடைக்கும்.

**சமுத்ரா ட்ரேட்ஸ் லிமிட்.**

23/2, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7236 1888



விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 தை 1 ரவி அவ் 17 இதழ் 333
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 14-1-82



**நாதன் அன் கோ**

எல்லா ரக உயர் தர
ஓடுகளுக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்

**நாதன் அன் கோ**

68, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.
நெட்டிலிப்பாய், கோண்டாவில்.
(1808)


## ★ வவுனியா அருகில்
# மினிபஸ் கொள்ளை

## பிரயாணிகள் பணம் உடைமைகளை இழந்தனர்

(நமது நிருபர் ரி.விவேகராசா)

**வவனியாவில் மினி பஸ் ஒன்றில் நேற்றுக் காலை கொள்ளையடிக்கப் பட்டது.**

முகமூடி அணிந்த மூன்று வாலிபர்கள், துப்பாக்கிமுனையில் பஸ்ஸை நிறுத்தி, பஸ்ஸிலிருந்த பிரயாணிகளின் சகல உடைமைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

செட்டிகுளத்திலிருந்து வவனியா நோக்கி வந்த மினி பஸ்தான் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

நேற்றுக் காலை எட்டரை மணியளவில் 15 பிரயாணிகளுடன் வந்துகொண்டிருந்த மினி பஸ்ஸை சின்னத்தம்பனைக்கும் நேரிய குளத்துக்கு மிடையில் மூன்று பேர் கொண்ட முகமூடி அணிந்த இளைஞர்கள் 2 துப்பாக்கி சகிதம் மினி பஸ்ஸை மறித்துப் பிரயாணிகளிடம் ரொக்கப் பணம், கைக்கடிகாரங்கள்' நகைகள், மற்றும் உடைமைகள் ஆகிய அனைத்தையும் கொள்ளையடித்துக்கொண்டு தப்பிச் சென்றுவிட்டார்கள்.

தகவல் அறிந்து ஸ்தலத்துக்கு இன்ஸ்பெக்டர் பியசேன பெரேராதலைமையிலான பொலிஸ் கோஷ்டி சென்றுள்ளது. கொள்ளையடிக்கப்பட்ட பொருகளிடன் பெறுமதி இச் செய்தி அச்சுக்கு போகும் வரை கணக்கிடப்படவில்லை.

விசாரணையை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கிருஷ்ணராசா நடாத்துகின்றார்.

## மாலைதீவில் கரைஒதுங்கிய குருநகர் மீனவர்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலுக்குச் சென்ற மூவர், மாலைதீவில் கரைஒதுங்கியுள்ளனர். இவர்கள் மூவரும் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

குருநகரைச் சேர்ந்த ராகு, நடராசா, ராஜா ஆகிய மூவருமே மாலைதீவு கடற்றொழிலாளர்களினல் காப்பாற்றப்பட்டு அங்கு பாதுகாப்பாக உள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

வெளிநாட்டு அமைச்சு யாழ். அரச அதிபருடன் இது சம்பந்தமாகத் தொடர்பு கொண்டுள்ளது.

## வடபிராந்திய டி. ஐ. ஜி. வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

''பொங்கல் திருவிழாமகிழ்ச்சியையும் அமைதியையும் குறிக்கும் வைபவமாகும். இன்று தினம் வழமைபோல் வடபகுதியில் மக்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியோடும் இவ்விழாவைக் கொண்டாடுவார்கள் என்று நம்புகின்றேன்''.

இவ்வாறு வடபிராந்தியப் பிரதிப்பொலிஸ் மா அதிபர் திரு. ஏ. நவரத்தினம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்களில் அசம்பாவிதமான சம்பவங்கள் எது

(6ம் பக்கம் பார்க்க)

## ''தமிழ் இனத்தின் துன்பம் தீர தைத்திங்கள் வழி காட்டும்''

### 'அமிர்' பொங்கல் செய்தி

(யாழ்ப்பாணம்)

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர்நாயகமுமான திரு. அ.அமிர்தலிங்கம் விடுத்திருக்கும் தைத்திருநாள் செய்தி:

''தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழ்மக்களின் பாரம்பரியமான நம்பிக்கை. பல பீதிகளுக்கு மத்தியில் வழக்கமான பட்டாசு வெடிகளின் ஆரவாரமும் இன்றிப் பிறக்கும் இத் தைத்திங்கள், ஆண்டுதோறும் அனுபவித்துவரும் தமிழினத்தின் துன்பம் தீர ஓர் வழியைக் காட்டும் என்றே நாம் நம்புகின்றோம். வெறும்பானை பொங்காது என்பது பழமொழி. தமிழ் இனத்தின் சுதந்திரப் பொங்கலும் மக்கள் ஒற்றுமை என்ற நீர்ல், விடுதலை இயக்கம் என்ற பானை விட்டு, பரிசுத்தமான தொண்டர்கள் என்ற அரிசியையும், பருப்பையுமிட்டு, இயக்கத் தொண்டர்களிடையே இருக்கவேண்டிய சகோதர அன்பு என்ற வெல்லத்தையும் சேர்த்து. செயல் திட்டம் என்ற அகப்பையால் கிளறி, தியாகம் என்ற தீயில் பொங்கிப் படைக்கப்பட வேண்டியதேயன்றி; மந்திரத்தால் மாங்காய் விழும் என்று கூறுவதுபோல் யாரும் படைக்கமுடியாதது என்பதைத் தமிழ்மக்கள் இப்பொங்கல் நன்னளில் தங்கள் உள்ளங்களில் பதியவைத்துக்கொள்ள வேண்டும்.

''எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்
எண்ணியர் திண்ணியராகப் பெறின்''

என்ற வள்ளுவர் வாய்மொழியை மனதிற்கொண்டு எத்தனை பயமுறுத்தலுக்கும் மத்தியிலும் நம்பிக்கையோடு பொங்கல் நன்னளைக் கொண்டாடுவோமாக.'' (மா)

## யாழ். அரசாங்க அதிபர் வாழ்த்துகிறர்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா விடுத்துள்ள தைப்பொங்கல் செய்தி:

''எல்லா முக்கிய தினங்களையும் போன்று தைப்பொங்கலும் ஆண்டுக்கு ஒருமுறை வரும் ஒன்றுயினும், தமிழ் மக்களை, குறிப்பாக இந்துக்களை, அதிலும் குறிப்பாக விவசாயப் பொதுமக்களைப் பொறுத்தவரையில் அது முக்கிய தினமாகும்.

''விவசாயிகளே நாட்டின் முதுகெலும்பு ஆவர். நாட்டைப் பொறுத்த வரையில் விவசாயத்துறையில் முக்கிய பங்கினைவகிக்கும் யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்குத் தைப் பொங்கல் தினத்தன்று நல் வாழ்த்துக்களைக் கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.'' (மா)

## ஓர் அன்பான வேண்டுகோள்

தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக 'ஈழநாடு' இதழின் விலையை தமிழ்த்திருநாளாம் பொங்கல்தினமான (14—01—1982) இன்றுதொடக்கம் ஒரு ரூபாவாக அதிகரிக்க வேண்டியுள்ளது என்பதை வாசக நேயர்களுக்கு அறிவித்துக் கொள்கின்றோம். பல இன்னல்களுக்கிடையிலும் எம்முடன் சகல விதத்திலும் ஒத்துழைத்துவரும் வாசகர்களும், விளம்பரதாரர்களும், விற்பனையாளர்களும் இந்தச் சிறு மாற்றத்தை மனமுவந்து ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகின்றோம்.

— நிர்வாகி

ஃ ஃ ஃ ஃ

## அறிவித்தல்

14—01—1982 பொங்கல் தினத்தன்று 'ஈழநாடு' ஊழியர்களுக்கு விடுமுறையாதலால் 15-ம் திகதி மட்டும் 'ஈழநாடு' இதழ் வெளிவரமாட்டாதென்பதை அறிவித்துக் கொள்கின்றோம். —நிர்வாகி

## இந்தச் சிலை இங்கு எப்படி வந்தது?

(வவனியா)

நள்ளிரவில் இனம் தெரியாத நபர்கள் சிதைந்தநிலையிலான பிள்ளையார் சிலை ஒன்றை வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரத்தின் இல்லத்தின் முன்னல் போட்டுவிட்டுச்சென்றுள்ளார்கள்.

இது தொடர்பாக வவனியா பொலிசாருக்கும், அபிவிருத்தி சபைத் தலைவருக்கும், அரசாங்க அதிபருக்கும் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பொலிசாரும் அபிவிருத்தி சபைத் தலைவரும் அரசாங்க அதிபரும் ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்டனர்.

பொலிஸார் இதுபற்றிய புலன் விசாரணையிலீடுபட்டுள்ளனர். (அ)

## மாவட்ட அமைச்சர் பொங்கல் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அமைச்சரும் தம்பதெனிய எம். பி.யுமான திரு. யு. பி. விஜேக்கோன் விடுத்துள்ள தைப் பொங்கல் செய்தி:

''உலகெங்கும் வாழ்கின்ற இந்து சமய மக்கட்கு தைப் பொங்கல் திருநாள் ஒருபெருநாள். உழவர் திருநாள். உலகில் வாழ்வாங்கு வாழ உழவர் உறுதுணையாவர். தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடும் தமிழ் இந்து மக்கள் நிறைந்து வாழ்கின்ற யாழ். மாவட்ட மக்களுடன் மாவட்ட அமைச்சர் என்ற முறையில் நான் கலந்துகொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

## பொங்கல் வாழ்த்து!

வாசகர்கள், விளம்பரதாரர்கள், விற்பனையாளர்கள் அனைவருக்கும், 'ஈழநாடு' தனது இனிய வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

—நிர்வாகி


''யாழ். நகரின் மத்தியில்''

**நவீன வர்த்தக நிலையம்**

யாழ். நகரின் முக்கிய கேந்திர ஸ்தானத்தில் பெரிய கடை மத்திய பஸ்நிலையம் முன்பாக அமையவிருக்கும் நவீன வசதிகளைக் கொண்ட, அடுக்கு மாடிக் கட்டிட வர்த்தக நிலையத்தில், கீழ் தளத்திலும், 1ம், 2ம் மாடிகளிலும் கடைகள் **குத்தகைக்கு** கொடுக்கப்படும். எந்தவிதமான வியாபாரத்திற்கும் ஏற்ற இடம். முழு விபரங்களுக்கும் உடனே தொடர்பு கொள்ளவும்.

**விளம்பர் இல 1960, C/o ஈழநாடு. த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.**

1960



புங்குடுதீவு இருபிட்டி
சனசமூகநிலையம்

**விசேட அறிவித்தல்**

தவிர்க்கமுடியாத காரணங்களால், இன்று ஏற்பாடு செய்திருந்த பொங்கல் விழாவும், விளையாட்டு விழாவும் பின்போடப்பட்டுள்ளது. இவ்விழா பிறிதொரு தினத்தில் நடைபெறும்.

**செயலாளர்**

இருபிட்டி சனசமூகநிலையம்.
14—01—82. 1893

### மணிவாக்கு

தார்மிகப் பற்றுடையோரையும், தார்மிகப் பற்றையும் கேலி பண்ணுவோரிடமிருந்து விலகியிருப்பாயாக.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

# நமது நோக்கு

## தமிழர் திருநாள்

இன்று நடைபெறும் வீட்டுப்பொங்கலும் நாளைய மாட்டுப்பொங்கலும் தமிழர் அனைவருக்கும் இரு புனித நாட்கள்.

கடந்த சில ஆண்டுகளாக தமிழ் மக்களுக்கு பொங்கல் மங்கலாகவே இருந்துவருகிறது.

இனிவரும் பொங்கல் பெரும்பொங்கலாகவேண்டுமென்று ஒவ்வொரு வருடமும் விரும்பியதெல்லாம் வீணாகப்போகின்றதே என்றொரு விரக்தி மக்கள் மனத்தில் குடிகொண்டிருப்பது விசனத்துக்குரியது.

அரிசி விலையேற்றம்; பட்டாசு வெடி தவிர்க்கப்பட்ட நிலை; காய்கறி, பழவகைகள் கிட்டாமை; விழாவின் பெருமை இராணுவம், பொலிஸ் முற்றுகையினால் குன்றியகோலம். இருப்பினும் வருணபகவான் படியளந்திருக்கிறான் என்றொரு தேற்றம்!

வன்முறையும் உட்பகையும், தன்னலப்பேராசையும் ஒழிந்துவிட்டால்தான் தருமம் தலைதூக்கும் என்றுவற்புறுத்தல் இன்றைய தினத்துக்கும் பொருத்தமானது.

வறுமையினால், ஏற்றத்தாழ்வினால், ஒற்றுமையின்மையால், வாடிநிற்கும் எமது சமுதாயம் பொங்கல் விழாவைக் கொண்டாடிக் குதூகலிப்பது எவ்வாறு?

இவைக்கெல்லாம்நாம் பிறரையோ, தெய்வத்தையோ நோவது அறியாமை; உண்மையில் அறிவின் வறுமையே இவையெல்லாவற்றிற்கும் காரணமென்பதை நாம் உணருங்காலம் வந்துவிட்டது.

'கண்றாவி' யாகக் காணப்படும் தமிழ்ச் சமூகம் இந்த நன்னாளில் தனது குறைநிறைகளைக் கணக்கெடுக்க வேண்டும்.

தமிழ் மக்கள் தமக்கென ஒரு ஆட்சி வேண்டுமென்றும் தமிழ்த்தாய், அரியாசனம் அமரவேண்டுமென்றும் உறுதி கொண்டால் இவையெல்லாம் தங்கள் கையில் உண்டென உணர வேண்டும்.

பசியும் பிணியும் பகையும் நீங்க, தாங்களே சுய முயற்சியில் ஈடுபடுவதைவிட வேறுவழியில்லை. தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிக்குப் பயனுண்டு.

போஷாக்கில்லாத இளஞ் சமுதாயம், இன்றைய திருநாளில் செல்வத்துட் செல்வமாகிய மாட்டுச் செல்வத்தை மீண்டும் எவ்வாறு பெறலாமென்பது ஒரு அவசியவிடயம்.

மாடு என்ற சொல்லுக்கே செல்வம் என்னும் பொருள் தமிழில் மட்டுமல்ல லத்தீனிலும் உண்டு. மாடு இல்லையென்றால் பண்ணையும் இல்லை; பயிர்த்தொழிலும் இல்லை.

உரத்திலும், நாசினிகளிலும், உழவு யந்திரங்களிலும் 'உயிரை விடும்' உழவர்கள் மாட்டுச் செல்வத்தை விருத்தி செய்து மாட்டுப் பொங்கலை பெருவிழாவாகக் கொண்டாட முன்வரவேண்டும்.

காவற்படையைப் பற்றி அதிகம் கவலைப்படாமல் காளைப்படையையும் கறவைப் படையையும் திரட்ட ஒரு பேரியக்கம் அமைக்க வேண்டும் வெற்றிடமெல்லாம் விளைநிலமாக மாற கற்றவரும் மற்றவரும் அயராது உழைக்க வேண்டும். சுயஆட்சியின்முக்கியஅம்சம் இது.

'வீட்டுக்கு ஒரு பசு' என்ற வீறுபடைத்த சுலோகத்தை எழுப்பியவர் மில்க்வைற் தொழிலதிபர் திரு. கனகராசா அவர்கள் வெறும் சுலோகத்துடன் நின்றுவிடாமல் ஒரு வலிமையான பயிற்சி நெறிக்கு அன்னார் உதவுவதை நாம் பாராட்டுகின்றோம்.

இத்தகைய சமூகத் தொண்டரின் தொகைகூடுவதாலேயே, அவர்களின் முற்போக்கை மற்றவர்கள் பின்பற்றுவதாலேயே எமது சமூகம் வளமடையமுடியும்.

அபிவிருத்தியென்றால் அது அரசு அமைக்கும் சபைக்குரிய கடமையென கண்மூடித்தனமாக வாழ்ந்தோமானால் பொங்கல் என்றும் மங்கலாகவே தோன்றும்.



## உழைப்பின் மகிழ்வு பெருமைகூறும்

# "பொங்கற் பாடல்கள்"

தைப்பொங்கலுக்குத் தனி மதிப்பு தரணியில் உண்டு. காரணம் இன—மத—மொழி வேறுபாடுகளை எல்லாம் கடந்து "உழைப்பாளர் வர்க்கத்தின்" மகிழ்ச்சிக் குறியீடாக பொங்கலை திருநாள் திகழ்கிறது. அதேபோல் பொங்கற்பாடல்களும் உலக இலக்கியத்தில் தனித்துவமான இடத்தை வகிக்கின்றன. காரணம் "உள்ளத்துள்ளது கவிதை—இன்பம் உருவெடுப்பது கவிதை — தெள்ளத் தெளிந்த தமிழில் உண்மை தெளிந்துரைப்பது கவிதை" என்ற கவிதை இலக்கணத்தின் உண்மைப் பிரதிபலிப்பை நாம் பொங்கற் பாடற்களில் காணலாம். எந்தவொரு படைப்பும் படைப்பாளரின் தன்முனைப்புக்குச் சிறிதாவது இடங்கொடுத்து விடுவது வழமை. எனவேதான் கவிதைகளில் மத—அரசியல் செல்வாக்குகள் இழையோடி பெரும்பாலான கவிதைகளைச சார்பு இலக்கியம் ஆக மாற்றிவிடுகின்றன. ஆனால் பொங்கற்பாடல்கள் வாத்தக இலக்குகளையோ சார்பு இலக்கியத் தன்மைகளையோ கொண்டிராது உழைக்கும் கூட்டத்து உள்ள உணர்வின் ஒலிக் குறியீடாகவும் எழுத்துவடிவமாகவும் வெளிப்பட்டு "நேர் இலக்கியமாக" இலங்கி உலக இலக்கிய அரங்கிலே பெருமதிப்பைத் தட்டிச் செல்கின்றன,

"பட்டி பெருகவேணும்
தம்பிரானே
பாற்பானை பொங்கவேணும்
தம்பிரானே
மேழிபெருகவேணும்
தம்பிரானே
வேளாண்மை விளைய
வேணும் தம்பிரானே
நாடு தழைக்க வேணும்
தம்பிரானே
நல்ல மழை பெய்யவேணும்
தம்பிரானே
ஓர் தழைக்கவேணும்
தம்பிரானே
எல்லோரும் வாழ வேணும்
தம்பிரானே"

என்ற பாடலை எடுப்பின் இங்கு உழைப்பாளர் கூட்டத்துக்கு இயல்பாகவே உள்ள தமது தொழில் இயற்கைச் செயற்கைத் தடங்கலின்றி நடக்கவேண்டும் என்ற கவலையும் அக்கவலையை போக்க நமது பாரம்பரிய உழைப்பாளி உள்ளத்து உணர்வோடு இறைவனை இறைஞ்சும் அமைப்பும்—ஆன்நலத்தினூடு பிறநலம் பேணும் பாங்கும் பளிச்சிடுவதைக் காணலாம்,

"எட்டுக்காலோடை
செல்லா—நமக்கு
இருகால்தலை மூன்று"

என்ற ஏர்ப்பாட்டை பார்த்தால் அங்கே உழைப்பாளி தன் உழைப்பின் கருவியாகிய மாட்டைதான் ஒரே தொகுதியாகக் கருதிடும் உள்ப்பண்பைக்காணலாம். அதே

### பற்றிமாகரன்

வேளை உழைப்பாளியும் மனித உணர்வுகளைச் சுமந்து வாழ்வதன் எதிரொலியாக காதல் பாட்டுக்களும் வயல் வெளிகளில் காற்றோடு தவழ்ந்து வருவதைக் காணலாம்.

"ஆதங்காக்க ஆதய்காக்க
அவரக்கண்டாற்
சொல்லிடுங்க
பூவரசங் கன்னியொன்று
பூ மலர்ந்து வாடுவதென்று"

என மட்டக்களப்பு முஸ்லீம் பெண்களின் மன ஏக்கத்தையும்

"வாவென்றழைப்பேன்
மச்சான்
வாசலிலே பாய்தருவேன்
வாப்பாஅறிஞ்சா
ரெண்டால்
வாளெடுத்து வீசிடுவார்"

பண்பாட்டுக் கோலங்களால் மன ஆசைகள் அணையிடப்படுவதன் தன்மைகளையும் வயற்பாடல்களில் காணலாம்.

இவ்வாறாக உண்மை நெஞ்சுடன் உழைப்பைப் புவிக்களித்து புவியை வாழவைக்கும் இப்பாட்டாளிகள் கூட்டம் வறுமைக் கோட்டுக்கு கீழே வாடிவதங்கும் பரிதாபத்தைக் கண்டு குமுறும் நெஞ்சங்கள் ஏட்டு இலக்கியத்திலே அவர்கள் இன்னலைப் பாடலாக்கவும் மறப்பதில்லை,

# உலக விழாவாக உருவாக்குவோம்

### யாழ். மேயர் பொங்கல் செய்தி

சோசலிச நாடுகளின் மரபிலே தொழிலாளர் விவசாயிகளுக்குரிய தினங்களுக்கு முக்கியத்துவம் தரவேண்டுவது அவற்றின் கடப்பாடாகின்றது, எங்ஙனம் சர்வதேச தொழிலாளர் தினத்தை மேற்படி நாடுகள் கொண்டாடி வருகின்றனவோ அதே பாங்கில் நாமும் தொழிலாளர் தினத்துக்குக் கொடுக்கும்ஒத்த முக்கியத்துவத்தை உழவர் பெருநாளுக்குத் தருவதன் மூலம், தொழிலாளர் தினத்தை உலகத் தொழிலாளர் ஒன்று சேர்ந்து கொண்டாடுவது போல உழவர் தினமும் விவசாயிகள் தினமாகக் கொண்டாடப்படும் நாளை விரைவில் வருவிப்போம் என்று யாழ்ப்பாண மாநகர மேயர் விடுத்துள்ள பொங்கல் செய்தியில் கூறியிருக்கிறார்.

உழவனை மையமாகக் கொண்ட பண்பாடுடைய ஒரு சமுதாயமாக இருதலால் உலகின் ஆறு கோடித் தமிழ் மக்களினதும் தேசியத் திருநாளாகவும் உழவர் திருநாளாம் பொங்கல் பெருநாள்ஏற்றிப்போற்றப்பட்டும், பேணப்பட்டும் வருகிறது.

ஆதியில் இருந்து தமிழ் மக்களால் ஒரு எதிர்பார்ப்பாக நம்பப்பட்டு வரும் "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற இவ் வார்த்தைகள் நனவாக வேண்டுமென்பதே இப்பொங்கல் பெருநாளில் எமது பிரார்த்தனையும் வாழ்த்துதலுமாகும்.

பொங்கல் பெருநாளில்புதிய நம்பிக்கையோடு ஒரு புதிய ஆண்டை எதிர்நோக்கவிருக்கும் தமிழ்த் தேசிய இனம் தனது பண்டைப் பாரம்பரியத்தின் வைப்பகத்தை யாழ். பொதுசன நூல் நிலையத்தை மீள்வித்துப் புனரமைத்தலிலும் சிரத்தை சொள்ளவேண்டுமென அழைக்கிறோம். தமிழீழத்தில் வாழும் தமிழர்கள் மட்டுமல்லாது உலகின் எட்டுத் திசைகளிலும் பரவி வாழும் ஆறு கோடித் தமிழரும் இப் பணிக்குத் தமது பங்களிப்பை ஈயவேண்டுமென தமிழர்தம் தேசியத் திருநாளில் இவ்வழைப்பை விடுக்கிறோம். என்று அவர் செய்தியில் மேலும் தெரிவித்திருக்கிறார்.

## சந்தேக நபர் மூவர் கைது

(கோண்டாவில்)

வீட்டில் இருந்த சுமார் 6500 ரூபா பெறுமதியான பொருட்களை களவாக எடுத்துக்கொடுத்து மது அருந்தி வந்ததாகக் கூறப்படும் இருவரை யாழ்ப்பாணம் பொலிசார் கைது செய்துள்ளார்கள். இச்சம்பவம் கொக்குவில் மேற்கில் நடந்துள்ளது.

வயோதிப மாது ஒருவரின் வீட்டிலிருந்த உரல், உலக்கை, அம்மி, பொட்டகம் முதலிய பொருட்களை அயலவர்கள் சிலர் சேர்ந்து திருடிச்சென்று மது விற்பனை செய்யும் வீட்டில் கொடுத்து மது குடித்து வந்தார்கள் என இச்சம்பவம் பற்றி கூறப்படுகிறது.

இதுபற்றி யாழ்ப்பாணம் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(க)

(யாழ்ப்பாணம்)

சிவநெறிக்கழகத்தின் பொங்கல் விழா நாளை மறுதினம் பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் கீரிமலை தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

## எங்கும் அமைதியும் அன்பும் அறமும் பொங்குக!

### வித்துவான் சி. ஆறுமுகம்

தையெனும் கன்னியும் புன்னகைவீசிச்
சதிருடன் வந்துவிட்டாள்—உழவர்
புதிருண வந்துவிட்டாள்!
வெய்யவன் பொங்கலும் வெடியின்
முழக்கமும்
விரும்பியே வந்துவிட்டான்—அவளும்
திரும்பியே வந்துவிட்டாள்!

உழுதுவிதைத்துப் பயிரை வளர்த்தவர்
உண்மைப்பயனுங்கண்டார்—உழவர்
உண்மைப்பயனுங்கண்டார்!
தொழுதுண்டு வாழவிரும்பாத
தூயவர்
சொல்லின் உழவரன்றோ—உண்மை
சொல்லின் உழவரன்றோ!

செந்நெல்லறுத்துக்குவித்துமிதித்துமே
சேர்க்கின்றார் வீட்டினிலே—உழவர்
சேர்க்கின்றார்—வீட்டினிலே!
அந்நியர் உற்றவர் ஆரென்றும்
பாராமல்
அள்ளி வழங்குகின்றார்—உழவர்
அள்ளி வழங்குகின்றார்!

மங்கலப் பொங்கலாம் மங்கை
வருகவே,
வாழ்த்தி மகிழுகின்றோம்!—உனையே
வாழ்த்தி மகிழுகின்றோம்!
எங்கும் அமைதியும் அன்பும் அறமுமே
பொங்கிடவே வருக—இன்பம்
பொங்கிடவே வருக!

## மீனவர் தகராறு மீண்டும் விசாரணை

(மன்னார்)

மன்னார் — சிறுத்தோப்பு நீர் நிலையங்களில் மீன்பிடித்து வரும் பேசாலை, வங்காலை சிறுத்தோப்பு ஆகிய இடங்களைச்சேர்ந்த மீனவர்களுக்கிடையிலான தகராறு தொடர்பான விசாரணை மன்னார் மாவட்ட கடல் தொழில் விரிவாக்க அலுவலரின் அலுவலகத்தில் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி நடைபெறும்.

விசாரணையை கடற்றொழில் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட திரு. எப் ஜி. வி. பெனண்டோ மேற்கொள்வார்.

# 'சமாதானத்துக்கு அரசாங்க ஊழியர் ஒன்றுபட்டு செயலாற்ற 'வேண்டும்'

## பிரிகேடியர் ரணதுங்கா வேண்டுகோள்

(வவனியா)

'நாட்டின் பாதுகாப்பில் அக்கறை கொள்வது பொலிசாருக்கு மாத்திரமோ, அன்றி ராணுவத்துக்கு மாத்திரமோ உரிய கடமையல்ல. இந்நாட்டின் பாதுகாப்பு மற்றும் இந்நாட்டு மக்களை அச்சமின்றி வாழவைக்கும் பொறுப்பு எல்லாருடைய கடமையுமாகும்.'

வவனியா கச்சேரியில் நேற்று காலை நடைபெற்ற மகாநாட்டில் பலாலி ராணுவமுகாமைச் சேர்ந்த பிரிகேடியர் ரணதுங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் இன்று நாட்டில் குழந்தைகள் அச்சத்திலும் பீதியிலும் வாழ்வது முறையல்ல அரசியல் டாங்கு அற்று அரசாங்க ஊழியர் அனைவரும் ஒன்றுகூடி சமாதானநிலையை மீண்டும் கொண்டுவர முனைய வேண்டும். பொலிசாருக்கும் பாதுகாப்பு படையினருக்கும் பொது மக்களுக்குமிடையில் நல் உறவுகளை பலப்படுத்த வேண்டும். ராணுவத்தைக் கண்டுஅச்சம்கொண்டு ஓடுவது கவலைக்குரியது. உங்கள் இறைவரியிலிருந்து தான் ராணுவத்துக்குச் சம்பளம் கொடுக்கப்படுகின்றது. அவர்களும் இந்நாட்டுப் பிரஜைகள் தாம். அவர்கள் தவறு செய்தால் உரியவர்களிடம் தெரிவிப்பது தான் கடமை. எனவே இராணுவத்தினர் உங்கள் எல்லோரையும் பாதுகாக்கவே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாண்டு யாவருக்கும் மகிழ்ச்சிகரமானதாகவும் தைப்பொங்கல் சிறந்த முறையில் கொண்டாடப்படவேண்டுமெனவும் அவர் கூறினார்.

இம்மகாநாட்டில் கேர்ணல் கொபேகடுவ, வவனியா மேஜர் ஹேரத், அரசாங்கஅதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன், வைத்திய அதிபதி, மாவட்டச் செயலாளரின் காரியதரிசி திரு. வீரபெருமாள், பொலிஸ் அத்தியட்சகர் திரு. சி. பி. ஜெயசூரியா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

---

### கடந்த வருடம்

## பதினாறு யானைகள் வேட்டையாடப்பட்டன

(கொழும்பு)

1981ம் ஆண்டில் பதினாறு யானைகள் அநுராதபுரம் மாவட்டத்தில் வேட்டையாடப்பட்டிருக்கின்றன என்று வனவிலங்குத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்பதினாறு யானைகளில் இரண்டு தந்தங்களை எடுப்பதற்காகக் கொல்லப்பட்டிருக்கின்றன என்றும் ஏனையவற்றை விவசாயிகள் தற்பாதுகாப்புக்கருதிக்கொன்றிருக்கின்றனரென்றும் வனவிலங்குகள் பற்றிய அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

தந்தங்களைச் சேகரிப்பதற்காகக் கொல்லப்பட்ட யானைகளினின்றும் அப்புறப்படுத்தப்பட்ட தந்தங்களின் பெறுமதி ரூபா ஒரு லட்சத்துக்கும் அதிகமானது என்று வனவிலங்குத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதவாச்சி, பதவியா கெக்கிரவ, திரப்பனே அநுராதபுரம் கிழக்கு ஆகிய பகுதிகளிலேயே அதிகளவில் யானை வேட்டைகள் இடம்பெறுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

---

## பாக். மீண்டும் உலகஹொக்கி சாம்பியன்

பம்பாய், ஜனவரி. 13

பாகிஸ்தான் மீண்டும் உலக ஹொக்கிச் சாம்பியன் கிண்ணத்தை சுவிகரித்துக் கொண்டது.

பம்பாயில் நேற்றுநடைபெற்றஉலகக் கிண்ண ஹொக்கிப் போட்டியில் பாகிஸ்தான் கோஷ்டி 3—1 கோல்களால் மேற்கு ஜெர்மனியைத் தோற்கடித்தது. (இ)

---

## பஸ் விபத்தில் நால்வர் பலி

மதுரை, ஜன. 13

திருவனந்தபுரத்தில்நிகழ்ந்த பஸ் விபத்தில் 4 பேர் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மதுரையிலிருந்து பாம்பூருக்குச் சென்று கொண்டிருந்த பஸ் திருவானந்தபுரத்தில் கவிழ்ந்ததை அடுத்து நான்கு பேர் ஸ்தலத்தில் பலியாகினர் 19 பேர் காயமடைந்தனர். (இ)

---

## அரசியல் காரணங்களுக்காக 6000 பேர் கைது!

லண்டன், ஜன. 13

பாகிஸ்தானில் கடந்த ஆண்டு இறுதியில் 6000 பேர் வரை அரசியல் காரணங்களுக்கா கைது செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை அறிவித்துள்ளது.

பஞ்சாப் மாநிலத்தில் மட்டும், கடந்த வருட இறுதியில் 1250 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதாகவும் இவற்றில் எத்தனை நிறைவேற்றப்பட்டதென்பதை அறிந்துகொள்ள முடியவில்லையென்றும் மேலும் அறிவித்துள்ளது.

லண்டனில் தலைமை அலுவலகத்தை வைத்திருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை மேலும் தெரிவிக்கையில் பாகிஸ்தானில் சிவிலியன் நீதிமன்ற அதிகாரங்கள் வாபஸ் பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து மரணதண்டனைகள் அதிகரித்துள்ளதாகவும், அரசியல் கைதிகள், சிறைப்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தது.

பாகிஸ்தான் ஜனாதிபதி சிவில் நீதிமன்றத்தின் அதிகாரங்களை வாபஸ்பெற்றதைத் தொடர்ந்து அங்கு நீதிச் சுதந்திரம் பறிபோய் விட்டதாகவும்மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. (க)

---

## திருட்டு

(மன்னார்)

வீட்டில் உள்ளவர்கள் அதிகாலையில் கோவிலுக்குச் சென்ற சமயம் வீட்டினுள் புகுந்த திருடர் ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் மன்னார் பட்டினத்திலுள்ள யேசுதாஸ் என்பவரின் வீட்டிலேயே இடம்பெற்றது.

---

## முதலமைச்சர் அந்துலே ராஜினமா!

புதுடில்லி, ஜன. 13

மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் அப்துல் ரகுமான் அந்துலே பம்பாய் உயர் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சரியானவை எனத் தீர்ப்பளித்ததை தொடர்ந்து நேற்று ராஜினமா செய்துள்ளார்.

திரு. அந்துலே ராஜினமா கடிதத்தை கவர்னரிடம் சமர்ப்பித்தபோது, மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் வரை முதலமைச்சரின்வேலைகளைக் கவனிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

திரு. அந்துலே மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நியாயமானவையென்றும், 2 ரஷ்டிகளுக்கு நன்கொடை வழங்கியது தொடர்பான குற்றச் சாட்டு சரிதானென்றும். பம்பாய் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது

திரு. அந்துலேயின் ராஜினமாவுக்கு இந்திராகாங்கிரஸ் இசைவு தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. (க)

---

## அளவுக்கு மீறினால்--

(மன்னார்)

அளவுக்கதிகமாக மது அருந்தி புத்தாண்டு தினத்தைக் கொண்டாடியவர் திடீரென மரணமானார். பேசாலையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் தொழிலாளியான சின்னையா என்பவரே மரணமானவராவார்.

இம் மரணம் தொடர்பாக மரணவிசாரணை மேற்கொண்ட மரணவிசாரணை அதிகாரி ஜனாப். எம். பி. ஏ. ஜப்பார் அளவுக்குமிஞ்சிய மதுசாரத்தால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளித்தார்.

---

### ஆஸ்திரேலிய அமைச்சர்

## விமான விபத்தை அறிந்ததும் மரணச்சடங்கிற்குச் சென்றாராம்!

கோலாலம்பூர், ஜன. 13

மலேசிய வெளிநாட்டு அமைச்சர் ஜனாப் ஷாபி விமானவிபத்தில் பலியானார் என்று முதலில் வெளிவந்த செய்தியைக் கேள்வியுற்றதும் ஆஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் மலேசியா வெளிநாட்டமைச்சரின்மரணச் சடங்குகளில்கலந்துகொள்வதற்காக மலேசியா விரைந்தார்.

முஸ்லிம்கள் மரணமடைந்த 24 மணி நேரத்திற்குள் மரணச் சடங்குகள் நடைபெறும் என்ற நடைமுறை இருந்து வருவதாலேயே ஆஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் உடனடியாகவே மலேசியா புறப்பட்டார்,

அவர் சிங்கப்பூர் வந்து சேர்ந்தபின்னரே மலேசிய அமைச்சர் விபத்தில் உயிர்தப்பிய அதிசயம் தெரிவிக்கப்பட்டதாம்.




# உற்சாகம் உழைப்பு ஊக்கம் ஆரோக்கியம்

தருவது புரதச் சத்துமிக்க புரோட்டினெக்ஸ் பரீட்சைக்குப் படிக்கும் பிள்ளைகளும் சதா உழைக்கும்பெற்றோரும் ஆயாசமும், களைப்பும் தீர அருந்துவது புரதச் சத்துமிக்க புரோட்டினெக்ஸ். உடலுக்கு உற்சாகத்தையும் மூளைக்குச் சுறுசுறுப்பையும் தருவது

# புரோட்டினெகஸ்

புரதச் சத்து நிறைந்த புரோட்டினெக்ஸ்
வாழ்க்கைக்குத் தருகிறது. ஆனந்தம், வலிமை, உற்சாகம்
புரதச் சத்து என்றால்
புரோட்டினெக்ஸ்
சொக்கலேட் ருசியுள்ள பானம்
புரோட்டினெக்ஸ்.
.50 கிரு. விலை ரூபா. 16.85




Pfizer

"ஏன் புரோட்டினெக்ஸ்"
த. பெ. 1362 கொழும்பு

ஏன் புரோட்டினெக்ஸ்
அருந்துகின்றீர்கள் என்பதை எழுதியனுப்பும் சிறந்த வாசகருக்கு கிழமை தோறும் புரோட்டினெக்ஸ் வழங்கப்படும்.

பெயர்: ..............................
விலாசம்: ..............................
அருகாமையிலிருக்கும் புரோட்டினெக்ஸ் விநியோகஸ்தர்: ..............................
திகதி: .................... கையொப்பம் ....................


---

### கடை உரிமைத் தகராறு:

## ஒருவருக்கு காயம் மூவர் கைது

(மாவிட்டபுரம்)

கடையொன்றை உரிமை கொண்டாடுவதில் ஏற்பட்ட தகராறுகாரணமாக அக்கடை தாக்கப்பட்டதுடன் நபர் ஒருவரும் பலத்த தாக்குதலுக்குள்ளானார். இச்சம்பவம் காங்கேசன்துறையில் நடந்தது.

காங்கேசன்துறைச் சந்திக்கண்மையிலுள்ள கடையொன்றை உரிமைகொண்டாடுவதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக இடம்பெற்ற மோதலில் சி. நவரத்தினம் என்பவர் படுகாயமடைந்து தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர்களான இவரது மாமனார் க. குருநாதபிள்ளையும் அவரது பிள்ளைகளான ஆறுமுகம், வரதராஜா ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் பற்றி உடனடியாக தகவல் கிடைத்ததயடுத்து அங்கு விரைந்த காங்கேசன்துறைப் பொலிசார் சந்தேக நபர்களை கைது செய்தனர்.

இது தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது. (கி)

---

## பதவி உயர்வு

(நயினாதீவு)

நயினாதீவு தபால் நிலைய அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம் அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள கதுடகஸ்திலிய அஞ்சல் அலுவலகத்துக்கு தலைமை அஞ்சல் அதிபதியாகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார்.

இவரது சேவையை கௌரவிக்கும்முகமாக நயினைப் பொதுமக்கள் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு விழா சந்தை மைதானத்தில் திரு. மா. வேதநாதன் தலைமையில் நடைபெற்றது. (ஏ)

Thultex

துல்ரெக்ஸ் தனது புதிய எதிர்காலத்தில் பங்கெடுக்க விற்பனையாளர்களை அழைக்கிறது.

எம்மைப்பற்றி...

வியந்திடும் புதுமையின் முதற்படியாக இப்பொழுது துல்ரெக்ஸ் இந்தியாவின் பொம்பே டையிங் ஸ்தாபனத்தின் புதிய சுறுசுறுப்பான நிர்வாகத்தின் கீழ் இயங்குகிறது.

வெகுவிரைவில் நாம், பரந்த அளவில் பல்வேறு வகையான உயர்ரக புடவைகளை வெளியிடவிருக்கிறேம்.

...உங்களுக்கு

தீவடங்கிய எமது புதிய சில்லறை விற்பனை வலையமைப்பிற்கு உங்களைப் போன்ற வியாபாரிகளைத்தேடுகிறேம்.

பின்வரும் வசதிகள் கொண்ட விற்பனையாளர்கள் நாடு முழுவதும் தேவைப் படுகிறர்கள்.

★ விற்பனை நிலையங்களுக்கருகில் நகரில் பண்டகசாலை வசதிகள்.

★ மூலதனத் தொழிற்பாட்டிற்கான மூலதன வசதிகள்.

அதிக லாபம் வழங்கும் நல்லதொரு வாய்ப்பு இது.

எனவே,

தயவு செய்து, உங்களைப் பற்றியும் உங்கள் பண்டகசாலை வசதி, முதலீட்டு வசதி ஆகியவற்றையும் குறிப்பிட்டு உடன் எழுதுங்கள்.

OVER 100 YEARS OF EXPERIENCE FROM BOMBAY DYEING

துல்கிரியா ரெக்ஸ்ரைல்ஸ் மில்ஸ்

195/1, காலி வீதி, பம்பலப்பிட்டிய, கொழும்பு - 4.

HIL TT 122

## உழைப்பைக் கௌரவிக்கும் பெருவிழா தைப்பொங்கல்

தை பிறந்தால் வழிபிறக்கும் என்ற நம்பிக்கை எமக்கு ஒவ்வொரு தை பிறக்கும் போதும் ஏற்படுகிறது. இதனுடன் தைப்பொங்கல் சேர்ந்து எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை யளிக்கிறது.

தைமாதக் குளிரோடு வரும் இப்பொங்கல்விழா ஓர்உயர்ந்த தத்துவத்தையும் உலகத்திற்கு உணர்த்தி நிற்கிறது. ஆம், ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்'' என்கிறர் வள்ளுவர்.

உழைப்பவர்க்கே இந்த உலகம் உரியது என்றஉண்மையை விளக்கி, உழைப்பைக் கௌரவிக்கும் பெருவிழாவாகத் திகழ்கிறது பொங்கல் விழா.

பண்டுதொட்டு இந்துக்களால் கொண்டாடப்பட்டு வரும் இவ்விழா வடஇந்தியாவில் ''சங்கராந்தி'' என்ற பெய

### ரசிலியூர்க் குரு

ரில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது அங்கும் முற்றத்தில் வண்ணக் கோலமிட்டு, புதுப்பானையில் புத்தரிசியிட்டுப் பாலும் நெய்யும் ஊற்றி, கருப்பம் சாறும் சேர்த்து பொங்கல் இடுவார்கள். சுற்றுலாக்காரரினுல் கவரப்பட்டதும், மறைந்த பாரதப் பிரதமரும் ஆசிய ஜோதி ஜவர்ஹரால் நேருவினுல் புகழப்பட்டதுமான இந்தோநேசியாவின் பாலித்தீவில் இப்பொங்கல்விழா தேசிய விழாவாக கொண்டாடப்படுவதன் மூலம் பொங்கல் விழாவிற்கு அங்கு அளிக்கப்பட்டிருக்கும் கௌரவத்தை நாம் அறிந்து கொள்ளலாம். சில மேற்கிந்தியதீவு நாடுகளிலும் சுமாத்ராவிலும், நேபாளத்திலும் பொங்கல்விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

தைப்பொங்கல் திருநாளிலே தான் பண்டைய தமிழர்களின் வீரவிளையாட்டுக்கள் இடம் பெறுவது வழக்கம். இவ்வாறு நடைபெறும் விளையாட்டுக்களில் ''ஜல்லிக்கட்டு'' என்னும்

(5 ம் பக்கம் பார்க்க)

அனைவருக்கும் அன்பு கலந்த

பொங்கல் வாழ்த்துக்கள்!

யாழ்ப்பாணத்தில் உங்களது

தேய்ந்துபோன டயர்களை புதுப்பிப்பதற்குச் சிறந்த இடம்

நோர்தேண் இண்டஸ்றீஸ்

112, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்

போன்: 7158

★ அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள் ★

★ கோவில் அபிஷேக சாமான்கள்

★ மருந்துச் சரக்குகள்

★ வாசனைத் திரவியங்கள்

சகல விதமான சாமான்களையும் சகாயவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

க. செ. கைலாசப்பிள்ளை

அன் சன்ஸ்

மருந்துச்சரக்கு வியாபாரம்

76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## அன்பும் அருளும் பண்பும் பரந்து பொங்குக!

### பரமாசாரிய சுவாமிகள் பொங்கல் வாழ்த்து

தமிழரின் நன்றிக் கடனுற்றும் பெருவிழாவே பொங்கல் விழா தமிழினத்தின் தனித் திருநாள் உழவர் பெருநாள். விளைவு தந்தது பூமி, வானம் பொழிந்தது. வையகம் விளைந்தது தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற முதுமொழிப் படி தை பிறந்த முதல் நாள் சூரியனுல் விளைந்த பயனைத் தையும் அவனுக்கு படைத்து நன்றி செலுத்துகின்றுன்.

பொங்கல் புறத்தே மட்டுமன்றி அகத்திலும் நடைபெற வேண்டும். மனம், புத்தி, சித்தம் என்ற மூன்று மூனை அடுப்பிலே வைராக்கியம் என்ற பானை வைத்து அன்பு என்ற பால் பொங்க பக்தி எனும் அரிசி டண்பு எனும் சர்க்கரை, பரிவு எனும் பருப்பு இட்டு கடமை என்னும் தீயில் வேக வைத்து ஞானம் எனும் சூரியனுக்கு நிவேதிக்க வேண்டும்.

அஞ்ஞானஇருள்அகலமெய்ஞ் ஞானக் கதிரவனுக்கு அன்பு பொங்க அருள் பொங்க, பண்பு பொங்க, நன்றிசெலுத்துவோமாக.

வாடிக்கையாளர் அனைவருக்கும்

எமது உளங்கனிந்த பொங்கல நல்வாழ்த்துகளை

தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேம்.

உங்கள் உள்ளம் கவர்ந்த நகைகளைத் தெரிவுசெய்ய

இன்றே விஜயம் செய்யுங்கள்

கே. ரி. எம். ஜுவலர்ஸ்,

67, கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் இனிய
பொங்கல் வாழ்த்துக்கள்
மாற்றுக் குறையாத நகைகளுக்கு யப்பான் ஜுவலர்ஸ்
கண்ணைக் கவரும் நகைகளுக்கு யப்பான் ஜுவலர்ஸ்
நவீன டிசைன்களைத் தருவதில் முன்னணியில் நிற்பவர்கள்
★ யப்பான் ஜுவலர்ஸ் ★
மூன்று தலைமுறையாக சேவையாற்றி வருபவர்கள்
ஜப்பான் ஜுவலர்ஸ்
ஜப்பான் ஜுவலர்ஸ்
64, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
Phone: 518

அனைவர்க்கும் இனிய
பொங்கல் வாழ்த்துக்கள்
அழகிய பவுண் நகைகள்
தங்கப்பவுண் வைரங்களுக்கு
கே. என். எம். மீருன்சாஹிப்
தங்கப்பவுண் நகைமாளிகை
நகை வியாபாரம்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 585

மில்க்வைற்
பொங்கல் வாழ்த்து
மங்கலப் பொங்கல் மனைதோறும் பொங்குக
எங்கும் பொங்குக ஏர்வளப் பொங்கல்
கவிதரும் மரங்கள் கற்பகம் பொங்குக
பனைவளம் பொங்குக பயிர்வளம் பொங்குக
செந்தமிழ் பொங்குக செய்தொழில் பொங்குக
மில்க்வைற் பொங்குக மிகுவளம் பொங்குக.

## ஒத்திவைப்பு

(நயினாதீவு)

ஸ்ரீகணேச சனசமூக நிலையம் பொங்கல் தினத்தையொட்டி ஏற்பாடு செய்திருந்த மின்னொளியிலான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி பெப்ரவரி 22 ம் திகதிக்கு பின் போடப்பட்டுள்ளது.

## உழைப்பைக்

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

'ஏறுதழுவுதல்' விளையாட்டுக் குறிப்பிடக்கூடிய துஇது காளைமாட்டை அடக்கும் வீரவிளையாட்டாகும். முரட்டுக் காளையை நீராட்டிப் பொட்டிட்டு, பூமாலைசூட்டி விளையாட்டு முன்றலில் அவிழ்த்து விடுவார்கள். அதனை அடக்கும் வீர இளைஞனுக்கு விருது வழங்கப்படும். இன்றும் தமிழகத்தில் சில இடங்களில் இது போன்ற விளையாட்டுக்கள் நடைபெற்று வருகின்றன. நாமும் இங்கு மாட்டுவண்டிச் சவாரி நடத்தி மகிழ்கின்றோம்.

மெக்ஸிக்கோ, ஸ்பெயின், நாடுகளில் 'ஜல்லிகட்டு' போன்ற ஒரு விளையாட்டு தேசியவிளையாட்டாகக்கொண்டாடப்படுகின்றது. காளைமாட்டை அரங்கின் மத்தியில் அவிழ்த்துவிட்டு லட்சோப லட்சம் மக்கள் பார்த்துக்குதுகலிக்கும் படியாக, ஒரு வீர இளைஞன் ஒரு சிவப்புத் துணியை அந்தக் காளைமாட்டிற்கு முன்பு அசைத்து, அசைத்துஅந்தமாட்டிற்கு மூர்க்கத்தையேற்படுத்தி ஈற்றில் அதை அடக்கி ஈட்டியால் கொல்வான் சிலவேளைகளில் அந்த வெறிகொண்ட காளை அடக்கச்சென்ற வீர இளைஞனைப் பதம்பார்த்து பலியெடுப்பதுமுண்டு.

பொங்கல் திருநாளுக்கு அடுத்தநாள் பட்டிப்பொங்கல் கொண்டாடுகின்றோம். பட்டிப்பொங்கல் ஆவினத்திற்கு இந்துக்கள் அளித்துள்ள மதிப்பையும், நன்றிப்பெருக்கையும் நினைவுகூரும் விழாவாகும்.

''ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை; என்றும் நம்ம வாழ்வில் பஞ்சமே இல்லை''

இது அர்த்தமுள்ள அடிகளாகும். உழவுக்கும் தொழிலுக்கும்வந்தனைசெய்யும்பண்பு தமிழர் வாழ்வில் ஊறிய தொன்றாகும்.


''உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனைசெய்வோம் · வீணே
உண்டுகளித்திருப்போரை
நிந்தனை செய்வோம்.
— பாரதி.

அனைவருக்கும் இனிய
பொங்கல் வாழ்த்துக்கள்
வட இலங்கையின் பிரபல
நகை, வைர வியாபாரிகள்
ஹரன் ஜுவலிலர்ஸ்
50, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்
போன்: 444

அனைவருக்கும் அன்பு கலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர
நகைகள் வேண்டுமா?
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்
போன்: 7199 ''தந்தி: வைரம்''

பம்புகள்
சீனாவில் தயாரிக்கப்பட்டவை
தாராளமாகக் கையிருப்பிலுண்டு.
கைப்பம்புகள்
★ மண்ணெண்ணெய், டீசல், உராய்வுத்தடை எண்ணெய், உணவிற்கான தாவர எண்ணெய் போன்றவற்றை பீப்பாய்களில் இருந்து உறிஞ்சி விநியோகிக்கப் பயன்படும் பம்புகள்.
ஒன்றின் விலை 425/- ரூபா
★ வீட்டுத் தேவைகளுக்கும், கிணற்றிலிருந்து நீரிறைக்கவும் பயன்படும் பம்புகள். 9 மீற்றர் உறுஞ்சுதூக்கி.
ஒன்றின் விலை 710/- ரூபா
இயந்திரப் பம்புகள்
★ பொதுவான எண்ணெய் விநியோகத்திற்கு உகந்தது.
ஒன்றின் விலை 1,335/- ரூபா
தொடர்பு கொள்ளுங்கள்;
ஈஸ்வரன் பிரதர்ஸ்
267, செட்டியார்தெரு. கொழும்பு 11.
(1977) தொலைபேசி: 32599, 22744

தமது வாடிக்கையாளர்க்கும்
விநியோகஸ்தர்களுக்கும்
அண்ணா கோப்பி
ஸ்தாபனத்தார் தமது உள்ளம் நிறைந்த
பொங்கல் வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கின்றார்கள்
அருந்துங்கள்!




அண்ணா
கோப்பி
No 1 கோப்பி வெற்றுப் பக்கட் மட்டை 5 மட்டும் அனுப்பி ஒரு மாதக் கலண்டரை இனாமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்!
அண்ணா இன்டஸ்றீஸ்
இணுவில். தொலைபேசி: 7412

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக
பொங்கலினால் இல்லம் பொலிகிறது. உங்கள் அழகு பொலிவதற்கு ஆபரணங்களை அணியுங்கள்!
சிறந்த—நவீன வேலைப்பாடுள்ள தங்க, வைர நகைகளை
விரும்பிய டிசைன்களில் தெரிவு செய்வதற்கு
விஜயம் செய்யுங்கள்!
செல்லையா சிவபாதலிங்கம்
வைரக்கல் நகை வியாபாரம்
220, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7794
★ ஓடர் நகைகள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

அனைவருக்கும் எமது அன்பான பொங்கல் வாழ்த்துக்கள்!
பாரத்
ஸ்ரூடியோ
82/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். போன்: 252
பாரத்
சென்ரர்
178, நவீன சந்தை, யாழ்ப்பாணம். போன்: 8265

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10.30, 2.15, 4.45, 7.15, 9.30
**DEATH DEMENTION**

**வெலிங்டன்**
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
**அன்னப்பறவை**

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

**றீகல்**
(யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் — லதா
நடித்த
**மீனவ நண்பன்**
(கலர்)

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
சிவாஜி
லட்சுமி
**தங்கைக்காக**

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

**ஸ்ரீதர்** தினசரி: 10:30, 2:15, 4:30,
யாழ். நகர் 7:00, 9:30
**COUNTESS DRACULA**
(ADULTS ONLY)

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி10—30,2—30,6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
**நான் வாழவைப்பேன்**

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

தித்திக்கும் தைத்திருநாள் திரைவிருந்து
வெற்றிப்பூட்டி பொங்கும் 19வது தினம்!
**சாந்தி** (யாழ். நகர்) தினசரி 10—30, 2—30,
தொலைபேசி;7642 6—15, 9—45
கமல்—ஸ்ரீதேவி—முத்துராமன்
மேஜர்— நடித்த
**குரு**
(ஈஸ்ட்மன் கலர்)

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

**ராஜா** (யாழ். நக )
**சரஸ்வதி** [திருமலை]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி—சக்கரவர்த்தி—லட்சுமிஸ்ரீ
**தர்ம யுத்தம்** (ஈஸ்ட்மன் கலர்)

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்!
இன்னும் சில தினங்கள் மட்டும்
யாழ். நகரில் இதுவே கடைசிமுறையாகக்
காண்பிக்கப்படுகிறது.

**வின்சர்**
(யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சுதாகர் ... ராதிகா
**நிறம் மாறாத பூக்கள்**
[இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி]



# பிலிப்ஸ் கிறைப் மருந்து

**உங்கள் குடும்பத்தின் சின்னக் குழந்தைக்கு இதமூட்டும் நம்பகமான பிலிப்ஸ் குடும்ப உற்பத்திப் பொருள்!**

குழந்தைக்கு ஏற்படும் வாயுப் பொருமல், வயிற்று வலி மூச்சுத் திணறல், பல் முளைப்பு வலி, மற்றும் சிறு சங்கடங்களுக்குத் துரிதமான இதமான நிவாரணம் தரும். பூரணப் பாதுகாப்புத் தரும் விதத்தில் வெளி நாட்டில் கிருமித் தாக்கம் நீக்கப்பட்டது.




ஆகக்கூடிய சில்லறைவிலை
60 மி.லீ - ரூ. 7.50
200 மி.லீ. - ரூ. 13.80

தயாரித்து விற்பனை செய்வோர்:-
மக்வூட்ஸ்-கிந்திரூப் லிமிட்டெட்
அலுவலகமும் பண்டசாலையும்: 35, மாதம்பிட்டி வீதி, கொழும்பு 15.
த. பெ. எண் 1744, தொலைபேசி: 591381 - 2, 590080


## இயக்குநர் நாயகம்

(கொழும்பு)

பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் புதிய இயக்குநர் நாயகமாக திரு. போல்பெரேராவை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நியமித்துள்ளார்.

இவ் ஆணைக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களும் விரைவில் நியமிக்கப்படவுள்ளன. புதிய இயக்குநர் நயகமாக நியமிக்கப்பட்டுள்ளர் திரு. போல் பெரேரா நேற்று முன்தினம் முதல் கடமையைப் பொறுப்பேற்றார்.

முன்பு இந்த ஆணைக்குழுவின் இயக்குநர் நாயகமாகப் பதவி வகித்த திரு. உபாலி விஜேவர்த்தன அண்மையில் இப்பதவியிலிருந்தும் இராஜினமாச் செய்தது தெரிந்ததே. (வெ)

## வவனியா பஸ் நிலையம்

(வவனியா)

வவனியா பஸ் நிலையத்தை நவீன மயமாக்கும் நோக்குடன் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தற்காலிக பஸ் நிலையம், குடியிருப்பு பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் நிறுவப்படுமென தெரிய வருகின்றது. பஸ் நிலையத்தில் உள்ள கடைகளும் தற்காலிக பஸ் நிலையம் அமைக்கப்படும் இடத்திலேயே மாற்றப்படலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது,


அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்!
**வெஸ்லி** மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9. 30
**எங்க பாட்டன் சொத்து**

அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்!
6 வது-மகளிர் வாரம்
**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
**நீல மலைகள்**


## இன்றைய பலன்

தை மாதம் 1ம் திகதி
வியாழக்கிழமை
(14—1—82)

மேடம்; பரோபகார சிந்தை மேலிடும் பொதுப்பணி புரிவதில் ஆர்வம் பிறக்கும் மதத் தலைவர் ஒருவர் நல்லாசி வழங்குவார். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையால் நல்ல பெயரும் கிடைக்கும்.

இடபம்: கடமையாற்றுமிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், பயனுள்ள சந்திப்பு இன்று நிகழும். இருப்பிடமாற்றத்துக்கான ஆலோசனைகளும் இன்று உருவாகும். அரசினர்ஆதரவு கிடைப்பதற்கு இடமுண்டு.

மிதுனம்: கூட்டுவியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு. வெளியூரில் இருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும். கடமையில் ஆர்வம் பிறக்கும். டாக்டர்களுக்கு செல்வாக்கு பெருகும். திருப்தியான தினம்.

கடகம்: இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும். காதல் கணை தாக்கும். கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள். பாலுணர்ச்சி மேலிடும். வாழ்க்கையில் முன்னேற்றம் தென்படும்.

சிங்கம்: இடர்கள் பலதாக்கும். இதயத்தில் எரிமலை குமுறும், அவசரப்புத்தியால் விபரீதங்கள் விளையலாம். உதவி செய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ளலாம். கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும்.

கன்னி: வீட்டில் சுபகருமங்கள் இடம் பெறும். பிரிந்தவர் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். கைத்தொழில் புரிபவருக்கு நல்ல வருலாய் உண்டு.

துலாம்: சீறிவரும் கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும், எதிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத விதமாக உடல் நலம் பாதிக்கப்படும். பொறுமை வேண்டும்.

விருச்சிகம்: வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்குப் பெருகும். செல்வாக்கு படைத்தவர்களின் ஆதரவு கிடைக்கும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த விடயமொன்று உங்களுக்கு சாதகமான பலனைத் தரும்.

தனு: அறிவுத்தாகம் மேலோங்கி நிக்கும். ஆராய்ச்சிகளில் ஈடுபடுவீர்கள் விருந்தினர்களின் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். எதிர்பாராத பணம் கைக்கு கிடைக்கலாம்.

மகரம்: தூரதேச வாசம் உங்களை துயரத்தில் ஆழ்த்தும். எதிரபாராத விபத்துக்கும் இடம் ஏற்படலாம், ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும்.

கும்பம்: காதலர்களுக்குகனகுசியான தினம். பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். இல்லத்தில் இனிமையான சம்பவம் இடம் பெறும். இன்று சுப தினம்.

மீனம்: குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். மறைமுகமாக நடாத்திய காரியம் ஒன்று இன்று அம்பலமாகலாம். சிலருக்கு விரக்தி மனப்பான்மை தென்படும். பொறுமையுடன் நடப்பது நல்லது

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## நூறு ரூபா அபராதம்

(புலோலி)

அளவுக்கு அதிகமான பிரயாணிகளை ஏற்றிச் சென்ற 'மினிவான்' சாரதியொருவருக்கு 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத் தொகையைச் செலுத்தத் தவறினால் 1மாத சிறைத்தண்டனை அனுபவிக்கும்படி உத்தரவிடப்பட்டது.

கே. செல்வராசா என்பவர் மினிவானில் 13 பிரயாணிகளை சளை கூடுதலாக ஏற்றிச் சென்றபோதுபருத்தித்துறைப் பொலிசாரிடம் சிக்கிக் கொண்டார்.

பொலிசார் இவரை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்த போது சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதவான் எதிரிக்கு 100 ரூபா அபராதம் அல்லது 1 மாத சிறைத்தண்டனை விதித்தார். (க)

## பின்னுறுதிக்கட்டளைபற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

மரணம் எய்திய கோண்டாவில், புகையிரத நிலைய வீதி வேலாயுதர் ஐயாத்துரை அவர்களின் மரணசாதனச் சொத்து வகையில் மரணமெய்தியவர்.

ஐயாத்துரை பொன்னுத்துரை, புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.

மனுதாரர்

வழ. இல: தத்துவம்/ 3348

எதிராக

1. குலசேகரம் சண்முகலிங்கமும்
2. பெண் ருஜிவியும் இருவரும் புகையிரத நிலையவீதி, கோண்டாவில்.

எதிர்வாதிகள்

மேலே இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேலே நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1982 ம் ஆண்டு தை மாதம் 15 ந் திகதி முற்பகல் 9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது.

1981 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 6 ந் திகதி இந்நீதிமன்ற கட்டளைப்படி என்னுல் வரையப்பட்டது.

தா.குலஞானம்
பதிவாளர்.

சி. சிதம்பரநாதன்
மனுதாரின் சட்டத்தரணி
1958

## வெற்றுச் சாக்கு விற்பனை

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 3000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 3/50 செலுத்திப் பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்தி பதிவுத் தபாலில் 30—1—82 நண்பகல் 12—00 மணிக்கு முன்னதாக செயலகத்தில் கிடைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வெற்றுச் சாக்கு' எனக் குறிப்பிடப்பட்டு 'தலைவர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுந்தீவு.' என விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும். வைப்புப் பணம் ரூபா 300/— ஆகும்.

க. கோபாலபிள்ளை
பொதுமுகாமையாளர்,
ப. நோ. கூ. சங்கம்,
1953 நெடுந்தீவு.

## கழிவு எண்ணை ஏல விற்பனை

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் ஏழு சாலைகளிலும் கழிவு எண்ணையைக் கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விரும்புவோர் தங்கள் படிவங்களில் ஒரு கலன் எண்ணையை கொள்வனவு செய்யும் விலையைக் குறித்து சீல் வைக்கப்பட்ட உறையில் தலைவர், கேள்விச்சபை, வட பிராந்திய போக்குவரத்துச் சபை,165, 4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு 20—01—1982 க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சி. [illegible]
தலைவர்,
வ. பி. போ. சபை

வட பிராந்திய
போக்குவரத்துச் சபை,
165, 4ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். 1926

## பின்னுறுதிக்கட்டளைபற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்

மல்லாகம் என்னுமிடத்தைச் சேர்ந்த காலம்சென்ற சண்முகம்பிள்ளைஅமிர்தலிங்கம் பெண் கமலாதேவி என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்துக்களினதும் உடமைப் பொருள்களினதும் விடயத்தில்.

— மரணமெய்தியவர்

மரணசாதன
நியாயாதிக்கம் இல.ரி 124

சண்முகம்பிள்ளை அமிர்தலிங்கம், 'தைரியவில்லா.' மல்லாகம்.

—மனுதாரர்

எதிராக

1. அமிர்தலிங்கம் மகள் கலாநிதி, மல்லாகம்.
2. சண்முகம்பிள்ளை யோகலிங்கம். பராயமற்ற 1ம் எதிர் மனுதாரின் பாதுகாவலராக மூளாய், சுழிபுரம்.

—எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கச் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணங் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982ம் ஆண்டு தை மாதம் 22ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் ஏதுமிருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1981ம் ஆண்டு கார்த்திகை மாதம் 17ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

சு. வ கணேசன்
பதிவாளர்.

என்னுல் வரையப்பட்டது.

ஆ த விக்னராசா
மனுதாரின் சட்டத்தரணி.
1975

# வரிவிளம்பரம்

### பயிற்சி

3 மாத பொது விவசாயப் பயிற்சி 17—25 வயதுடைய இரு பாலாருக்கும் 22—2—82 ஆரம்பமாகிறது, சிறு ஊதியம் வழங்கப்படும். ஆண்களுக்கு விடுதி வசதி. விண்ணப்ப முடிவுதிகதி 30—1—82. யாழ்ப்பாணக் கல்லூரி, விவசாய நிறுவனம், மருதனமடம், சுன்னுகம். 1945

### விற்பனைக்கு

சொந்தப் பாவிப்பிலுள்ள 1300—1971 தொடர் 8ஸ்ரீ5244 இலக்கமுடைய வெள்ளைநிற வோக்ஸ்வேகன் கார் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க: காராளசிங்கம், 84, கச்சேரி — நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 1962

### தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு ஆங்கிலம், கணிதத்தில் தேர்ச்சியும், ஆங்கில தட்டெழுத்தில் நல்ல பயிற்சியும், அனுவமுமுள்ள பெண் தட்டெழுத்தாளர்/லிகிதர் தேவை. தகுதி உள்ளவர்கள் எதிர்பார்க்கும் சம்பளத்துடன்20—01—82க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1969, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 1969

### தவறிவிட்டது

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் 'விஞ்ஞான மேதைகள்' என்ற புத்தகமும் G.C.E.(A/L), G.C.E.(O/L) பரிட்சை பெறுபேறு பத்திரங்களும் காணமல்போய்விட்டது கண்டெடுப்பவர்கள் தயவு செய்து சத்தியபாலன், 'சண்முகஜோதி', மல்லாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1976

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்யமான மரக்கடைச்சல் தொழிற்சாலைக்கு வேலை தெரிந்த பெண்பிள்ளைகளும் புதிதாக பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பமுடிவு 25—01—82 விளம்பர இல. 1970, மே/பா. ஈழநாடு, த. பெ. எண் 49, யாழ்ப்பாணம். 1970

### யாருடையது?

யாழ், மானிப்பாய்வீதியைச் சேர்ந்த வி. கந்தசாமி என்பவரால் வீதியில் கண்டெடுக்கப்பட்ட திறப்பு ஒன்றுடன் காப்புறுதிப் பற்றுச்சீட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்,

### தேவை

நல்ல நிலையில் உள்ள அல்லது
புதிய தறப்பாள் தேவை. நீளம் 46' அகலம் 15'
தொடர்புகொள்ளவும்

பொதுமுகாமையாளர்,
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுந்தீவு.
1952

### விற்பனையாளர் தேவை

கொழும்பிலுள்ள பிரபல்யமான நகைக்கடைக்கு மூன்று பாஷையும் தெரிந்த அனுபவமுள்ள விற்பனையாளர் உடன் தேவை. இருப்பிடவசதி உண்டு. நற்சான்றுகளுடன் நேரில் வரவும்.

வைரமாளிகை,
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்
1956


**உலகப் பிரசித்தி பெற்ற**

**German TV**

# NORDMENDE

COLOUR TV with MANUAL AS WELLAS TELE CONTROL

பலதரப்பட்ட அளவுகளில் தூரதிருஷ்டிக் கட்டுப்பாட்டுக் கருவியுடனும் கருவிஇல்லாமலும்
யாழ்நகரில் பெற்றுக்கொள்ள

**A BAUR & CO LTD** (JAFFNA BRANCH)

மற்றும்

- விவசாய இரசாயனப்பொருட்கள் — AGRO CHEMICALS
- மருந்து வகைகள் — DRUGS
- தெளிகருவிகள் — SPRAYERS
- இயந்திர தெளிகருவிகள் — POWER SPRAYERS
- உர வகைகள் — FERTILIZERS
- ஓவல்ரின் — OVALTIN
- ஓவாமில் — OVAMIL
- Honda மோட்டார் சைக்கிள் — HONDA MOTOR CYCLES

விநியோகஸ்தர்கள் — AUTHORIZED DISTRIBUTORS FOR

- அரச மருந்து கூட்டுத்தாபனம் — STATE PHARMACUTICAL CORPORATION
- இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம் — CEYLON PLY WOOD CORPORATION
- இலங்கை தோல் கூட்டுத்தாபனம் — CEYLON LEATHER CORPORATION

விபரங்கட்கு:

ஏ பவர் அன் கோ லிமிட் (யாழ்ப்பாணக் கிளை)
இல 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

A. Baur & Co Ltd. (JAFFNA BRANCH)
No. 5, CLOCK TOWER ROAD, JAFFNA,
T—Phone: 7651 — 7156 (1957)



பொங்கி பூரித்திடும் இப்புத்தாண்டில்
எமது வாடிக்கையாளர்களுக்கு
எமது உள்ளம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்
உங்கள் உடல் வளர்ச்சி பெற
சாம்சன் சாப் லேட்டுநல்லெண்ணையை
பாவியுங்கள். எங்கும் கிடைக்கும்.
தயாரிப்பாளர்.
**சிவகுமாரன் ஸ்ரோர்ஸ்,**
மூத்தநயினர் கோவிலடி, ஆனைக்கோட்டை
(1978)



எமது வாடிக்கையாளர்களுக்கு
அன்பு கலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்

வடமாகாணத்திலேயே — தமிழக உள்ளூர்
வித்துவான்களின்
கர்நாடக (வாய்ப்பாட்டு,வாத்திய) இசை
கச்சேரிகளை விசேஷ கவனமெடுத்து
ஒலிப்பதிவு செய்து தருபவர்கள்

**'துர்க்காஸ்**
**றெக்கோடிங் (B) பார்**

68, கே. கே. எஸ் வீதி [illegible]
வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
1972

வர்த்தகப் பெருமக்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்,
நண்பர்கள் அனைவருக்கும்
மங்களம் பொங்கும் இன்றைய பொங்கல் திருநாளில்
மகிழ்ச்சிகரமான பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

பெஸ்ரோன்
விளம்பர சேவை

பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.
''தெரிந்தவர்களுக்குப் புரியும்''
1979

## இன்று கட்டிடத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். ஐயனார் கோவிலடி சனசமூக நிலையப் புதிய கட்டிடத்திறப்பு விழாவும் பொங்கல் விழாவும் இன்று பிற்பகல் நடைபெறுகின்றன.

பிரதம விருந்தினர்களாக வைத்திய கலாநிதி தி. கங்காதரனும் .சிவதர்மவள்ளல் க. கனகராசாவும் கலந்து கொண்டு உரையாற்றுவர். (அ)

எமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

ட்ரான்ஸ்லங்கா
இன்வெஸ்ற்மென்ற் லிமிட்டெட்
கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!

திருகோணமலை -- யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம் -- திருகோணமலை
கொழும்பு -- யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம் -- கொழும்பு

ஆகியவற்றுக்கான பயணச் சேவையை திறம்பட நடாத்துபவர்

வி. ஆர். வி. ரான்ஸ்போட்

சேகரம் கட்டிடம், 188/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

காங்கேசன் ரவல்ஸ்
மிக சொகுசு பஸ் சேவை

காங்கேசன்துறைக்கும் கல்முனைக்கும் யாழ்ப்பாணம், மட்டுநகர் ஊடாகச் செயலாற்றும் எமது பஸ் சேவையில் கடந்த 1—1—82 முதல் பிரயாணிகளின் சௌகரியத்தை முன்னிட்டு உறங்கலிருக்கை ஆசனங்கள் பொருத்தப்பட்ட பஸ்கள் செயலாற்றிவருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் இந்நீண்ட தூரப்பிரயாணிகளின் பிரயாண வசதியை முன்னிட்டு மேற்படி பாதையில் 1—1—82 முதல் பகல் சேவையும் நடைபெறுகின்றது என்பதையும் தெரிவிக்கின்றோம்.

பஸ் சேவைக் கட்டணங்கள் பின்வருமாறு:-

| பகல் சேவை | | இரவு சேவை | |
|---|---|---|---|
| காங்கேசன்துறை/கல்முனை | 57/— | காங்கேசன்துறை/கல்முனை | 62/— |
| காங்கேசன்துறை/மட்டுநகர் | 52/— | காங்கேசன்துறை/மட்டுநகர் | 57/— |
| யாழ்ப்பாணம்/கல்முனை | 55/— | யாழ்ப்பாணம்/கல்முனை | 60/— |
| யாழப்பாணம்/மட்டுநகர் | 50/— | யாழ்ப்பாணம்/மட்டுநகர் | 55/— |

நேரசூசிகை

| புறப்படும் நேரம் | | சேரும் நேரம் | |
|---|---|---|---|
| காங்கேசன்துறை | காலை 5—15 | மட்டுநகர் | பிற்பகல் 3—30 மணி |
| யாழ்ப்பாணம் | காலை 6—30 | கல்முனை | பிற்பகல் 4—30 மணி |
| கல்முனை | காலை 5—15 | யாழ்ப்பாணம் | பிற்பகல் 3—45 மணி |
| மட்டுநகர் | காலை 6—45 | காங்கேசன்துறை | பிற்பகல் 4—30 மணி |
| காங்கேசன்துறை | பிற்பகல் 4—00 | மட்டுநகர் | காலை 3—00 மணி |
| யாழ்ப்பாணம் | பிற்பகல் 5—30 | கல்முனை | காலை 4—00 மணி |
| கல்முனை | பிற்பகல் 4—00 | யாழ்ப்பாணம் | காலை 3—00 மணி |
| மட்டுநகர் | பிற்பகல் 5—30 | காங்கேசன்துறை | காலை 4—00 மணி |

ஆசனங்கள் பதிவுசெய்யுமிடங்கள்

1. காங்கேசன் ரவல்ஸ்
காங்கேசன்துறை.
தொலைபேசி: 34

2. ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ்
நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 660

3. இராசேஸ்வரி ஸ்ரோர்ஸ்
திருமலை வீதி, மட்டுநகர்.
தொலைபேசி; 2035.

4. ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்
கடை வீதி, மட்டுநகர்.

5. ராஜா ஸ்ரோர்ஸ்
வாடி வீட்டு வீதி, கல்முனை

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எங்கள் உளம்கனிந்த
பொங்கல் நல் வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கிறோம்.

காங்கேசன் ரவல்ஸ்

122, மெயின் வீதி, காங்கேசன்துறை.

## இன்று மூன்று முக்கிய தினம்

இன்று தமிழர் திருநாளாகிய பொங்கல் தினத்தில் செந்தமிழ்ச் செல்வத் திருக்குறளை உலகுக்கு அளித்த தெய்வத் திருமகனின் 2013-ம் ஆண்டு ஆரப்பமாகின்றது.

தமிழுக்கு இறவாத புகழைத்தந்த மூன்று புனித நூல்களில் திருக்குறள் முதல் இடத்தை தமிழரின் பண்பாட்டின் உயிராக இடம் பெறுகின்றது.

இப்புனித திருக்குறளின் பெருமையைத் தாம் எழுதிய தத்துவ நூல்கள் மூலம் உலக மக்களின் கவனத்திற்குக் கொண்டு வந்த உத்தமனும் தத்துவ மேதையும் 1952-ம் ஆண்டு சமாதானத்திற்கு நோபல் பரிசு பெற்றவருமான டாக்டர் அல்பேட் சுவெட்சர் ஆவர். இவர் பிறந்த நாளும் இன்று ஆகும் இவர் 14 ம் நாள் தைத்திங்கள் 1875 ம் ஆண்டு பிறந்தார்.

இவர் திருக்குறளை ஜெர்மன் மொழி மூலம் பயின்று அதன் சிறப்பினை அறிந்து வாழ்க்கை வாழ்வதற்கே என்ற தத்துவமும் இயங்கும் அன்பும் இதில் அடங்கி இருப்பதை உலகுக்கு எடுத்துரைத்தார். உயர்ந்த அறிவுரைகள் உள்ள நூல்களில் திருக்குறளே முதல் இடத்தை வகிப்பதாகக் கூறியிருக்கிறார்.

டாக்டர் அல்பேட்சுவெட்சருக்கு நன்றியாக அவர் பிறந்த நாளை நினைவுபடுத்தி திருவள்ளுவருடைய 2013 ம் ஆண்டில் ஒவ்வொரு தமிழனும் திருக்குறளை முதல் நூலாகக் கொண்டொழுகி தெய்வீகத் திருவருளைப் பெற்று மகிழ்ச்சியுடனும் சமாதானத்துடனும் வாழ்வோமாக.

-- ஏ என் யோகநாதன்
(தலைவர், தெய்வீகத்திருக்குறள் மன்றம் கந்தர் மடம்]

## வடபிராந்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வும் நிகழாமல் பார்த்துக் கொள்வது இப்பகுதி இளைஞர்களின் பொறுப்பு; அது அவர்களின் மதிப்பை உயர்த்துவதுமாகும்.'' என்று தமது அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார். (மா)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஜனவரி மீ 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.